பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 21 வியாழக்கிழமை 07.11.2024 கதிர் 365

**இது ரகசியம் அல்ல!**

தேர்தல் பரப்புரைகளின் முன்னணி அரங்கிற்கு 'ஏக்கிய ராஜ்ஜிய' மீண்டும் வந்துள்ளது. கிட்டதட்ட 5 ஆண்டுகள் கடந்து இப்போது மீண்டும் இந்தச் ☞2

# சமஷ்டிக்கு இடமேயில்லை ஆளும்தரப்பில் திட்டவட்டம்

## அமைச்சர் விஜித ஹேரத் அறிவிப்பு

எமது ஆட்சியில் சமஷ்டி ஆட்சிக்கு இடமில்லை. அதேபோன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும் நடைமுறைப்படுத்த இடமளிக்கமாட்டோம் என்று தேசிய மக்கள் சக்தி திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

அமைச்சரவைப் பேச்சாளரும் அயலுறவுத்துறை அமைச்சருமான விஜித ஹேரத் இந்த அறிவிப்பை நேற்று விடுத்தார்.அமைச்சரவைத்தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு விடை அளிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

சமஷ்டி குறித்த ஆளும் தரப்பின் நிலைப்பாடு என்ன என்பதை அநுர தரப்பு தெளிவுபடுத்த வேண்டும் என்று பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச அண்மையில் வலியுறுத்தியிருந்தார். அதுபோன்றே சமஷ்டி அரசமைப்பை ஏற்படுத்துதல் மற்றும் ஐ.நா. தீர்மானங்களை ☞2

## ட்ரம்பிற்கு அநுர வாழ்த்து



அமெரிக்காவின் 47 ஆவது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி டொனால்ட் ☞2

## ரணிலும் வாழ்த்து

அமெரிக்காவின் ஜனாதிபதியாக மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்பிற்கு முன்னாள் ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

தனது எக்ஸ் தளத்தில் ரணில் விக்கிரமசிங்க இந்த வாழ்த்தைப் பதிவு செய்துள்ளார்.

'ஒருவரலாற்றுவெற்றிக்குவாழ்த்துகள், அமெரிக்காவைஇன்னும்மகத்தானதாக்க அமெரிக்க மக்கள் உங்கள் மீது நம்பிக்கை வைத்துள்ளனர்' என்று ரணில் விக்கிரமசிங்கவின் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச உறவுகளை ☞2

# பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட்டேயாகவேண்டும்

## அதுவே தமது நிலைப்பாடு என்கிறது ஆளும்தரப்பு

பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பாக புதிய ஆளும்தரப்பு அமைக்கப்பட்டதன் பின்னரே நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைத்தீர்மானங்களை வெளியிடும்அமைச்சரவை சந்திப்பில் கருத்து தெரிவித்த அமைச்சர் விஜித்த ஹேரத் இதனைக் கூறியுள்ளார்.

தற்போது நாடாளுமன்றம் ஒன்று இல்லை. எனவேபயங்கரவாததடைச் சட்டத்தைநீக்குவது அல்லதுதிருத்துவது குறித்த நடவடிக்கைகளை ☞2 எடுக்க முடியாது.



### எரிபொருள் விலை நிர்ணயம் குறித்து

## முன்னுக்குப் பின் முரணாக கருத்து தெரிவித்த அமைச்சர்

எரிபொருள் விலை சூத்திரம் தொடர்பில் அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத் இரு ஊடகவியலாளர் மாநாடுகளில் இருவேறுபட்ட கருத்துக்களை முன்வைத்துள்ளார்.

கடந்த ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் விலைசூத்திரத்துக்கமைய எரிபொருள் விலைகள் தீர்மானிக்கப்படவில்லை என்றும்,பெற்றோலியக்கூட்டுத்தாபனத்தின் மதிப்பீடுகளுக்கமையவே தீர்மானிக்கப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் முன்னர் குறிப்பிட்ட கருத்து முற்றிலும் மாறுபட்ட வகையில், விலைசூத்திரத்துக்கமையவேஎரிபொருள் விலைகள் தீர்மானிக்கப்படுவதாகக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மீண்டும் ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பிய போது, விலைசூத்திரத்துக்கமையவே விலை திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியேற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

''அதிகாரத்தை இழந்துள்ளதால் முன்னாள் ஆட்சியாளர்களால் புதிய ஆளும்தரப்புக்கு எதிரான கருத்துக்கள் ☞2

## உள்ளூராட்சி தேர்தலுக்கு தயாராகும்படி பணிப்புரை

### மாவட்ட அதிகாரிகளுக்கு ஆணைக்குழு விடுத்தது

பொதுத் தேர்தலுக்குப் பின்னர் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை மிக விரைவில் நடத்துவதற்கு தயாராகுமாறு தேர்தல்கள்ஆணைக்குழுவின் தலைவர் ஆனந்த ☞2

## நிர்வாக சேவைத் துறைகளில் நிரப்பப்படாமல் 1200 இடங்கள்

பொதுநிர்வாகசேவை உள்ளிட்ட பலஅரசநிர்வாகசேவைகளில்1200-இற்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் நிலவுவதாக பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

பொது நிர்வாக சேவை மற்றும் கணக்காய்வு சேவைகளிலேயே அதிக வெற்றிடங்கள் நிலவுகின்றன.

இந்தச் சேவைகளுக்கு ஆட்சேர்ப்பு பரீட்சைகள் தற்போது நிறைவடைந்துள்ளதுடன் பெறுபேறுகளின் அடிப்படையில் உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

பொறியியல் துறையிலும் 250-இற்கும் மேற்பட்ட ☞2

நாடாளுமன்றத் தேர்தல் - 2024
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டம்
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி



இளைய தலைமுறையின் எதிர்பார்ப்பு!
ஊழலற்ற தூய கரங்கள்!!
3
சட்டத்தரணி
கேசவன் சயந்தன்
(முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர்)
அறிவு - ஆற்றல் - ஆளுமை

# சமஷ்டிதான் எமது கோரிக்கையும் ஐதேக யாழ். வேட்பாளர் அறிவிப்பு

சமஸ்டி முறையான தீர்வே எமது கோரிக்கையுமாகும். அதனூடாகவே தமிழர்களின் பிரச்சினைகளை தீர்க்க முடியும் எனயாழ். தேர்தல் மாவட்டத்தில் ஐக்கியதேசியகட்சியில்முதன்மை வேட்பாளராகபோட்டியிடும்டேவிட் நவரட்ணராஜ் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் யாழ்தேர்தல் மாவட்ட தலைமை காரியாலயம் பலாலி வீதி கந்தர்மடத்தில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. அதன் பின்னர் செய்தியாளர்களிடம்பேசியடேவிட் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களிடையே பிரபல்யமான கட்சி ஐக்கிய தேசியகட்சியே. அதன்சின்னமாக இப்பவும் யானை சின்னமே உள்ளது. அதனால் யானை சின்னத்தில் நாம் யாழ். தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுகிறோம்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கரமசிங்க இரண்டு வருடங்களில் நாட்டை பொருளாதார வீழ்ச்சியில் இருந்து காப்பாற்றியவர். கடற்தொழில், விவசாயம்,கல்விபோன்றவற்றை மேம்படுத்துவோம். இனப்பிரச்சனைக்கு தீர்வு விடயத்தில் தமிழ் மக்களுக்குசாதகமாசெயற்பட்டது. ஐக்கிய தேசிய கட்சியே.

சமஷ்டி முறையான தீர்வே எமது தீர்வாகும். அதனூடாகவே தமிழர்களின் பிரச்சினைகளை தீர்க்க முடியும் - என்றார்.

## இனி இது .....

சொல்லாடல்அரசியல்களத்தில்சதிராடுகின்றது.

தமிழீழவிடுதலைப்புலிகளின்ஆயுதங்கள் மௌனித்த பின்னர், அரசியல்தீர்வு ஒன்றைப் பெறுவதற்கான முயற்சிக்குத் தலைமை தாங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், தாம் வார்த்தைகளில் தொங்கிக் கொண்டிருக்கப்போவதில்லை என்பதைத் தெளிவாகத் தமிழ் மக்களிடம் எடுத்துச் சொல்லிவிட்டுத்தான் அந்த முயற்சிகளில் ஈடுபட்டார்.

அதாவது சமஷ்டி என்ற சொல்லாடல் இல்லாவிட்டாலும் அதற்கான பண்புகளைக் கொண்டஅரசமைப்புஒன்றைஏற்றுக்கொள்வார் என்பதை அவர் தெளிவுபடுத்திவிட்டுத்தான் அந்த முயற்சிகளில் ஈடுபட்டார். அதற்கு தமிழ் மக்களும் தேர்தல்கள் மூலம் அங்கீகாரம் வழங்கியிருந்தார்கள். போரால்ஏற்பட்டபெரும் அழிவுகளுக்குப் பின்னர் தமிழ் மக்களை மீண்டெழவைப்பதற்குஎந்தவழியிலாவதுஒரு தீர்வைப் பெறுவது சம்பந்தரின் நோக்கமாக இருந்தது. துரதிர்ஸ்டமாக அதற்கு சிங்களத் தலைமைகள் ஒத்துழைக்கவில்லை. சமஷ்டி என்ற சொல்லாடலை மட்டுமல்ல அதன் பண்பியல்புகளை ஏற்றுக்கொள்ளும் அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதிலும் சிங்களத் தரப்புக்கள் ஆர்வம் காட்டவில்லை. அதில் ரணில் விக்கிரமசிங்க உட்பட அனைத்துத் தலைவர்களுமே தமிழ்த் தலைவர்களை ஏமாற்றும் விதத்திலேயே செயற்பட்டு வந்துள்ளார்கள்.

இந்தப் பின்னணியில்தான் 'ஏக்கிய இராஜ்ஜிய' என்கிற ஒருமித்த நாடு என்று அர்த்தப்படுத்தப்பட்ட அரசமைப்பு வரைவு ஒன்றை 2018இல் முன்வைக்கப்பட்டது. இன்று அந்த அரசமைப்பு முயற்சிகளை விட்ட இடத்திலிருந்து தொடர்வதற்குத் தயார் என்று தேசிய மக்கள் சக்தி அரசு அறிவித்திருக்கின்றது. தமிழர்களுக்கானதீர்வு என்ன என்ற கேள்விக்கே அநுரகுமாரவின் ஆளும்தரப்புஇந்தப்பதிலைத்தெரிவிக்கின்றது. பொருளாதார மறுமலர்ச்சியை ஏற்படுத்தி சிங்களவர்கள் விரும்பும்படி ஓர் ஆட்சியை வழங்கி தம்மை ஆளும் சக்தியாக சிங்கள மக்களிடம் நிலைநிறுத்தவேண்டிய தேவையில், அவசியத்தில் உள்ள தேசிய மக்கள் சக்தி, உண்மையில் அரசியல் தீர்வு விடயத்திலும்புதிய அரசமைப்பு விடயத்திலும் தனது ஆட்சிக் காலத்தில் அக்கறை செலுத்துமா என்பதும் கேள்விக்குறிதான்.

2015 அரசமைப்பு வரைபை அப்படியே ஏற்றுக்கொள்வதாகதேசியமக்கள்சக்திஎங்கும் தெரிவிக்கவில்லை. அந்த வரைபுக்கான முயற்சியிலிருந்து தொடரலாம் என்பதுதான் அதன் நிலைப்பாடாக இருக்கின்றது. அதேபோன்று 'ஏக்கிய இராஜ்ஜிய' வரைபை ஏற்றுக்கொண்டதமிழ்த்தேசியக்கூட்டமைப்பில் இருந்தகட்சிகள்கூடபின்வந்தநாட்களில்அந்த வரைபை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியதில்லை. அதற்குப் பதிலாக சந்திரிகா அம்மையாரின் தீர்வுப் பொதி முதற்கொண்டு 2018 தீர்வு வரைவு வரை உள்ள ஆவணங்களின் அடிப்படையில் பேசி ஒரு தீர்வைக் காணலாம் என்றுதான் கூறிவந்திருக்கின்றன. ஆக மொத்தத்தில் தேசிய மக்கள் சக்தி புதிய அரசமைப்பு முயற்சிக்கான நடவடிக்கைகளை எடுத்தாலும் அது இலகுவானதாக இருக்கப்போவதில்லை இரு தரப்பினருக்குமே.

இந்த நிலையில் 'ஏக்கிய இராஜ்ஜிய'வுக்கு மாற்றுத் தீர்வு என்னவென்று தமிழ் காங்கிரஸிடம் கேட்டால், தமிழர்களின் ஆதரவுஇல்லாமல்சிங்களவர்கள்மூன்றாவது அரசமைப்புஒன்றைஏற்படுத்திக்கொள்ளட்டும் என்பதுதான் என்கிறார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். ஒருவேளை எல்லா ஒற்றையாட்சிக் கூறுகளோடும் 'சமஷ்டி இலங்கை' என்று அரசமைப்புக்குப் பெயர் வைத்தால் ஏற்றுக்கொள்வார்களோ என்னவோ.

சிங்களவர்கள் சமஷ்டியை ஏற்காத வரைக்கும் இலங்கையில் சமஷ்டி ஏற்படப்போவதில்லை. எந்த வெளிநாடும் வந்து அதைப் பெற்றுத் தரப்போவதுமில்லை. விக்னேஸ்வரன்சொன்னதைப்போலஎல்லாத் தமிழ்க் கட்சிகளும் சமஷ்டியைக் கேட்டாலும் அதை அடைவதற்கான வழி வகை என்ன என்பது ஒரு கட்சிக்கும் தெரியாது என்பதுதான் உண்மை. அப்படியிருக்கும்போது சமஷ்டிக் கூறுகளை ஏற்றுக்கொண்டு முன்னேறுவதா இல்லை பெயர்தான் எங்களுக்கு முக்கியம் என்று நாண்டுகொண்டு நிற்பதா என்பதைத் தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் தீர்மானிக்க வேண்டும் என்கிறது காங்கிரஸ். பார்க்கலாம் தமிழ் மக்கள் மீண்டும் என்ன சொல்லப் போகிறார்கள் என்று. அவர்கள் என்னத்தைச் சொன்னாலும் அடுத்த தேர்தலிலும் இந்த 'ஏக்கிய இராஜ்ஜிய' சொல்லும் பௌத்தத்திற்கு முன்னுரிமை என்கிற கருத்தும் மீண்டும் பேசப்படும் என்பதில் எனக்கு அளவுக்கு மீறிய நம்பிக்கை உண்டு. ஏனெனில் நமது அரசியல் 'டிசைன்' அப்படி.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சமஷ்டிக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றின் அடிப்படையில்ஆளும்தரப்புக்கு நாடாளுமன்றத்தில் தமிழ் அரசுக் கட்சி ஆதரவளிக்கும் என்றும் சுமந்திரனுக்கு அமைச்சர் பதவி வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளது என்றும் உதய கம்மன்பிலவும் தெரிவித்திருந்தார்.

இதுகுறித்துசெய்தியாளர்சந்திப்பில்கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப்பதிலளித்தஅமைச்சர் விஜித ஹேரத், "சமஷ்டி அரசமைப்பை எமது ஆட்சியில்நடைமுறைப்படுத்தப்போவதில்லை. அதுபோன்றே ஐ. நா. தீர்மானங்களை நடைமுறைப்படுத்தவும் எமது ஆட்சியில் இடமளிக்கப்படாது. அத்துடன், ஆட்சியமைப்பது தொடர்பில்இலங்கைத்தமிழ்அரசுக்கட்சியுடன் பேச்சு எதுவும் நடத்தவில்லை" - என்றார்.

## ரணிலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலுப்படுத்துவதற்கு அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி ஒரு முன்மாதிரியான தலைவர் என்றும் ரணில் விக்கிரமசிங்கவின் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிர்வாக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

இந்த அனைத்து வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்புகளையும்துரிதகதியில்மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## டிரம்பிற்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜே.டிரம்பிற்கு, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

தனது எக்ஸ் தளத்தில் பதவு ஒன்றை இட்டு ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார்.

"அமெரிக்காவின்47ஆவதுஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட டொனால்ட் ஜே. டிரம்ப் அவர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன். இலங்கை மற்றும் அமெரிக்க மக்களுக்கு நன்மை பயக்கும் எமக்கிடையிலான உறவிலுள்ள பொதுவான இலக்குகளை அடைவதற்கு உங்களுடன் இணைந்துபணியாற்றநான்எதிர்பார்க்கிறேன்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பயங்கரவாத ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே ஆளும்தரப்பு இருக்கிறது. இந்த விடயத்தில் புதிய நாடாளுமன்றம் கூட்டப்படும்போது உரிய தீர்மானம் எடுக்கப்படும்.

நான் கடந்த அமைச்சரவையில் கூறிதாக வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிடல்களில் தவறுகள் காணப்படுகின்றன. நாம் குறித்த சட்டத்தினைநீக்கப்போதி;லைஎன்றுகூறியதாக வடக்கிலும் அண்மையில் பேசப்பட்டுள்ளது.

உண்மையில் நான் அவ்வாறு கூறவில்லை. தற்போது அதற்கான நிலைமைகள் இல்லை என்றே கூறினேன் என்றார்.

## உள்ளூராட்சி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரத்நாயக்க அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மற்றும் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு நேற்றுப் பணிப்புரை விடுத்துள்ளார்.

# மண்சரிவு அபாய எச்சரிக்கை

நாட்டின் பல பிரதேசங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை அறிவிப்பு ஒன்றை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ளது.

நேற்று மாலை 4.00 மணி முதல் இன்று மாலை 4.00 மணி வரை அமுலுக்கு வரும் வகையில் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கேகாலை மாவட்டத்தின் தெரணியகல, ருவான்வெல்ல, தெஹிம்பிவிட்ட, யட்டியந்தோட்டை, கேகாலை, கலிகமுவ, புலத்கொஹுபிட்டிய, வரகாபொல மற்றும் அரநாயக்க ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளும் இரத்தினபுரி, குருவிட்ட மற்றும் எஹெலியகொட ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு 'அவதானத்துடன் இருக்கவும்' என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், பதுளை, காலி, களுத்துறை, கண்டி, குருநாகல் மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களுக்கு 'கவனமாக இருக்கவும்' என மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# வாகன இறக்குமதி தொடங்கவுள்ளது

## அமைச்சரவைப் பேச்சாளர் தகவல்

வாகன இறக்குமதிக்கான முதல் கட்டத்தை தொடங்கவுள்ளதாக ஆளும்தரப்பு அறிவித்துள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று அமைச்சரவைப் பேச்சாளர் இதனைத் தெரிவித்தார்.

வாகனங்களை இறக்குமதி செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சு என்பன இருக்கின்றன. மூன்று கட்டங்களாக வாகன இறக்குமதியை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது என்றார் அமைச்சர் விஜித ஹேரத்.

சுற்றுலாத் துறைக்கு தேவையான வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பிலும்கவனம்செலுத்தப்பட்டுள்ளதாகவும் வாகன இறக்குமதியாளர்களுடன் இதுதொடர்பில் கடந்த வெள்ளிக்கிழமை பேச்சு நடத்தியிருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு குறித்து

# அமைச்சரவை வழிகாட்டல்படியே தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பை குறைப்பதா- இல்லையா என்பது தொடர்பாக அமைச்சரவையின் வழிகாட்டலுக்கு இணங்கவே தீர்மானம் மேற்கொள்ளப்படும் என பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு தொடர்பாக மதிப்பீட்டு அறிக்கையொன்றை அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக தெரிவித்த அவர், அந்த அறிக்கையின் அடிப்படையில் அமைச்சரவை மேற்கொள்ளும் தீர்மானத்தின் பின்னரே அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு தொடர்பாகஆராய்வதற்காகநியமிக்கப்பட்டுள்ள குழுவில் பரிந்துரையின் அடிப்படையில், குறித்த மதிப்பீட்டு அறிக்கையை தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, அறிக்கையை பாதுகாப்பு அமைச்சினூடாகஅமைச்சரவைக்குசமர்ப்பிக்க எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு உள்ளிட்ட சலுகைகள்தொடர்பாகவிடயங்களை மீளாய்வுசெய்வதற்காகஜனாதிபதிஅநுர குமார திசாநாயக்க மூவரடங்கிய குழுவொன்றை அண்மையில் நியமித்ததாகவும் அக் குழு அதன் பரிந்துரை அறிக்கையை விரைவில் ஜனாதிபதிக்கு கையளிக்கவுள்ளதாகவும் பதில் பொலிஸ் மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

உயர்நீதிமன்றஉத்தரவுப்படி, தேவையான ஏற்பாடுகளைஉடனடியாகச்செய்யவேண்டும் என்றும் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கும் அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மற்றும் மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சிஅலுவலர்களுக்குஇடையிலான விசேட சந்திப்பு நேற்றுக் காலை இராஜகிரிய தேர்தல் செயலகத்தில் இடம்பெற்றது.

அங்குவைத்தேஆணைக்குழுத்தலைவர் இந்தப் பணிப்புரையை விடுத்தார்.

## முன்னுக்குப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரவலாக முன்வைக்கப்படுகின்றன. நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதன் பின்னர் எரிபொருட்களின் விலைகளை 20 ரூபாவால் குறைத்திருக்கின்றோம். ஆனால்அதுதற்போது பெரும்பாலானோருக்கு நினைவில் இல்லை.

விலைசூத்திரத்துக்கமையஉலகசந்தையில் எரிபொருள் விலையை அடிப்படையாகக் கொண்டே உள்நாட்டில் எரிபொருள் விலை தீர்மானிக்கப்படுகிறது. பொருளாதாரம் மேம்படும் போது மக்கள் எதிர்பார்க்கும் நிவாரணங்கள் வழங்கப்படும். ரணிலின் ஆளும்தரப்பால் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டுக்கமையவே தற்போது எரிபொருள் விலைகள் நடைமுறைப்படுத்தப் படுகின்றன" என அமைச்சர் விஜித ஹேரத் மேலும் குறிப்பிட்டார்.

# சந்திரிகாவின் பாதுகாப்பை குறைக்கவில்லை

*முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கான பாதுகாப்பு குறைக்கப்படவில்லை என்று அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்.*

*அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே இதனைக் குறிப்பிட்டார்.*

*தற்போது வரையில் 57 பாதுகாப்பு அதிகாரிகள் அவரின் பாதுகாப்புக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அவருக்கான பாதுகாப்பு 30 பேர் வரையில் குறைக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.*

### தேசிய மக்கள் சக்திக்கு

# அரசியல் அனுபவங்கள் இருந்தாலும் அரசை நிர்வகித்து அனுபவமில்லை

### சாகல ரத்நாயக்க வறுத்தெடுப்பு



தேசிய மக்கள் சக்திக்கு அரசியல் செய்து அனுபவம் இருக்கிறது. ஆனால் அரசாங்கம் செய்த அனுபவம் இல்லை. அதனால்தான் பாஜருளாதாரத்தை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை அவர்கள் இன்னும் நாட்டுக்கு வெளிப்படுத்தாமல் இருக்கின்றனர். அவ்வாறான வேலைத்திட்டம் அவர்களிடம் இல்லை என புதிய ஜனநாயக முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள புதிய ஜனநாயக முன்னணியின் தேர்தல் வழிநடத்தல் காரியாலயத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற செய்தியாளர்சந்திப்பில்கலந்துகொண்டு கருத்துதெரிவிக்கையிலேயேஇவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

தேசிய மக்கள் சக்திக்கு அரசாங்கம் செய்த அனுபவம் இல்லை என்பது அவர்களின் கடந்த ஒரு மாதகால நடவடிக் கைகளில் இருந்து தெரிந்துகொள்ள முடியும். ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் இன்னும் எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு விமர்சன அரசியல் செய்வது போன்றே தற்போது செயற்பட்டு வருகிது.

நாட்டை நிர்வகிக்கும் அவர்களுக்கு ஒரு முறையான வேலைத்திட்டம் இருக்க வேண்டும். நாட்டைமுன்னெடுத்துச்செல்வதற்கு பயணப்பாதை இருக்க வேண்டும்.

ஆனால் இதுவரை அவர்கள் அவ்வாறான எந்த வேலைத்திட் டத்தையும் நாட்டுக்கு முன்வைத் ததில்லை. அவர்களிடம் அனுபவம் இல்லாமையே இதற்கு காரணமாகும்.

எமதுநாட்டின்பொருளாதாரம்வீழ்ச்சியடைந்திருந்த நிலையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் வேலைத்திட்டம் காரணமாகபடிப்படியாகஅபிவிருத்தியடைந்துவந்தது. முறையான வேலைத்திட்டம் இருந்தமையாலே அவ்வாறு செய்ய முடிந்தது.

அரசாங்கத்தை கொண்டு செல்லும் எமது பயண வழியை நாங்கள் முன்வைத்திருந்தோம். அப்போது எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு எமது வேலைத்திட்டத்தைவிமர்சித்தார்கள். ஆனால்அதற்கு மாற்று வழியை அவர்கள் முன்வைக்கவில்லை.

தற்போது அதிகாரத்தில் இருக்கும் இவர்களுக்கு நாட்டைஅபிவிருத்தி செய்ய எந்த வேலைத்திட்டமும் இல்லை. அவ்வாறு வேலைத்திட்டம் இருந்தால் அதனை வெளிப்படுத்த வேண்டும். அப்போதுதான் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தை பார்த்து எமது ஆலாசேனைகளை முன்வைக்க முடியும்.

வீழ்ச்சியடைந்திருந்த இந்த நாடு தற்போதுதான் மீண்டும் அபிவிருத்தியடைய ஆரம்பித்திருக்கிறது. இந்நிலையில் நாடு மீண்டும் வீழ்ச்சியடைந்து, மக்கள் பொருட்களுக்கு வரிசையில் இருக்கும் நிலை ஏற்பட யாரும் விருப்பம் இல்லை. அந்த நிலைக்கு செல்லாமல் தடுப்பதற்கே, நாட்டை கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தை வெளிப்படுத்துமாறு நாங்கள் தெரிவித்து வருகிறோம்.

நாட்டின் கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தத்தில் நாங்கள் கைச்சாத்திட்டிருக்கிறோம். அதன் பிரகாரம் இன்னும் 4 வருடங்களில் மீண்டும் கடன் செலுத்த வேண்டி இருக்கிறது. அதற்கு தேவையான வேலைத்திட்டம் என்ன என்பதை அரசாங்கம் தெரிவிக்க வேண்டும்.

அரசாங்கம் ரணில் விக்ரமசிங்க கொண்டு சென்ற பொருளாதார வேலைத்திட்டத்தை அவ்வாறே முன்னெடுத்து செல்கிறதா அல்லது வேறு வேலைத்திட்டத்தை வைத்திருக்கிறதா என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.

அப்போதுதான் எமக்கும் அது தொடர்பில் ஆலாசேனைகளை தெரிவிக்க முடியும். அவ்வாறு இல்லாவிடின் ராஜபக்ஷவினர் போன்று நினைத்த பிரகாரம் செயற்பட்டால் நாடு வீழ்ச்சியடைவதை தடுக்க முடியாமல்போகும். – என்றார்.

(05)

# பொய்யான வாக்குறுதிகளால் மக்களை ஏமாற்ற முடியாது

### ஜனாதிபதியைக் கடிந்துகொண்ட ஜீவன்

தற்போதைய ஜனாதிபதி பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 2000 ரூபாய் சம்பளம் வழங்க வேண்டும் என்று கடந்த காலங்களில் பல மேடைகளில் சாத்தியமற்ற உறுதிமொழிகளை வழங்கினார். ஆனால் ஞாயிற்றுக்கிழமை 3 ஆம் திகதி நுவரெலியாவில் நடந்த கூட்டத்தில் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு சம்பளம் கணிசமான அளவு அதிகரிக்கப்படும் என தெரிவிக்கின்றார். இவ்வாறான பொய்யான வாக்குறு திகளால் மக்களை ஏமாற்ற முடியாது என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

டயகாமம் பகுதியில் திங்கட்கிழமை 4 இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டுகருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

கடந்த 4 வருடங்களுக்கு மேலாக பல்வேறு அவமானங்களையும் பிரச்சினைகளையும் சந்தித்தித்து தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பளஅதிகரிப்பைபெற்றுக்கொடுப் பதாக உறுதியளித்தோம் தற்போது அந்த வாக்குறுதியை நிறைவேற் றியிருக்கிறோம் தொடர்ந்து எமது மக்கள் பல பிரச்சினை களை எதிர்கொள்கின்றனர்.

நாம் நில உரிமையற்ற சமூகமாக இருக்கிறோம் இதற்காக காணி உரிமை நிச்சயம் வேண்டும் காணி உரிமையை மக்களிடையே ஒப்படைத்தால் 90 சதவீதமானோர் தானாகவே வீடுகளை கட்டிக் கொள்வார்கள் காரணம் தோட்டப்பகுதியில் வாசிப்பவர்கள் இன்று ஒருசிலர் மாத்திரம் தோட்டத்தில் தொழில் புரிகின்றன ஏனையார் அரச ஊழியர் ஆகவும், தலைநகரங்களில் தொழில் புரிவோராகவும் அல்லது வெளிநாடுகளில் தொழில் புரிவோராகவும் உள்ளனர் இதனால் அவர்களின் தேவைக்குஏற்றது போல் வீடுகளைஅமைத்துக்கொள்வார்கள் கூறுவதில் எந்த சந்தேகமும் இல்லை இதற்காகவே தான் இன்னமும் காணியுரிமைக்காக நாங்கள் போராடிக்கொண்டிருக்கின்றோம்.

ஒரு சில அரசியல்வாதிகள் கூறுகின்றார்கள் மலையக மக்களுக்கு காணி உரிமை வழங்கினால் அவர்களுக்கு கஷ்டம் ஏற்படும் போது அவற்றை விற்பனை செய்து விடுவார்கள் என்று இது அரசியல்வாதிகளுக்கு தேவையற்ற ஒரு விடயமாகும்.

தொடர்ந்து எங்களுக்கு விமர்சனங்கள் பல இருந்தாலும் நான்கு வருடகாலமாக மக்களுக்காக நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்தேன் அதேபோல் மக்களின் பிரச்சினைகளுக்கு களத்தில் இறங்கி நான் குரல் கொடுத்திருக்கின்றேன் எந்த இடத்திலும்நான்ஓடி ஒழியவில்லை இதற்குஜனாதிபதிவழங்கும்பெயர் சண்டித்தனமான அரசியல் நாம் ஒன்றை மறந்துவிடக்கூடாது நாடு வங்குரோத்து அடைந்த போது கூட மலையகத்தை பொறுத்தவரையில் இரண்டு சம்பள உயர்வுகளை பெற்றுக்கொடுத்துள்ளோம் இதனையும் போராடி பெற்றோம் என தெரிவித்தார்.(05)

### பனை அபிவிருத்தி அதிகார சபை தலைவர் நியமனத்தால்

# அநுர ஆட்சியின் ஊழலற்றதேசம் என்ற நிலைப்பாடு கேள்விக்குறி

### ஈ.பி.டி.பி. ரங்கன் தெரிவிப்பு




யாழ்ப்பாணத்தில் உள்ள பனை அபிவிருத்தி அதிகாரசபையின்தலைவராகஊழல்மோசடிநிறைந்த ஒருவரை நியமித்துள்ளமை ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்கவின்ஊழலற்றதேசம்என்றநிலைப்பாட்டை கேள்விக்குறியாக்கியுள்ளது என ஈ.பி.டி.பியின் ஊடக பேச்சாளரும்நாடாளுமன்றதேர்தல்வேட்பாளருமான ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்க ஊழலை ஒழிப்போம் ஊழல் வாதிகளுக்கு தமது அரசில் எந்தவொரு இடத்திலும் பதவி நிலை வழங்கப்படாது என கருத்தை முன்வைத்தே ஆட்சி அதிகாரத்தை பெற்றுக்கொண்டார்.

இந்நிலையில் தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ள பனை அதிகார சபையின் தலைவராக நியமிக்கப் பட்டுள்ளவர் தனியார் நிறுவனங்களில் பதவிநிலை வகித்துபல்வேறுவகைகளில் பல கோடிகளை ஊழல் மோசடிகளை செய்தவர் என கூறப்படுகின்றது. இவை கடந்தகாலங்களில் சமூக ஊடகங்களிலும் வெளியாகியிருந்தன.

அந்தவகையில் இவ் வாறான ஒரு மோசடி மிக்க நபரை பனை அபிவி ருத்தி அதிகார சபையின் தலைவராக நியமித்தமை யானது ஜனாதிபதி அனுர வின் கருத்தை அல்லது அவரது நிலைப்பாட்டை கேள்விக்குறி யாக்கியுள் ளதுடன் அவருக்கு வாக்க ளித்த மக்களையும் விசனமடையசெய்துள்ளது.

குறிப்பாக பனைசார் உற்பத்தி தொழிலை முன்னெடுக்கும் மக்களை பெரும் சங்கடத்துக்கும் உள்ளாக்கியுள்ளது.

அத்துடன் அத்துறை சார்ந்தவர்களின்உழைப்பும் முதலீடுகளும் கேள்விக்குறியாக இருந்துவரும் நிலையில் இந்த நியமனத்தால் மேலும் பாதிப்பை எதிர்கொள்ளவுள்ளது.

அத்துடன் இவ்வாறான நியமனம் அந்த மக்களை மேலும் மன ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பாதிக்கு வகையில் அமையும் என சுட்டிக்காட்டிய அவர் இது தொடர்பில் ஜனாதிபதி அவதானம் செலுத்த வேண்டும் என மேலும் தெரிவித்துள்ளார்.(05)



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வரவேற்கத்தக்க தீர்ப்பு

இலங்கை வரலாற்றில் அதிகாரிகள் மட்டத்தில் இழைக்கப்பட்ட மிகப் பெரிய குற்றமாகக் கருதப்படும் 12 1/2 கோடி ரூபாய் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் நான்கு சுங்க அத்தியட்சகர்களும் குற்றவாளிகள் என கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. வழக்கை விசாரித்த நீதிபதி நாமல் பலல்லே சந்தேகநபர்கள் நால்வரும் குற்றவாளிகள் என்று கண்டறிந்து அவர்களுக்கு தலா 35 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்துள்ளார்.

குற்றவாளிகளான 4 பேரிடம் இருந்தும் அவர்கள் இலஞ்சமாக 10 ஆண்டுகளுக்கு முன்பு வாங்கிய ரூ.12 1/2 கோடியை தனித்தனியாக வசூலிக்க உத்தரவிட்ட நீதிபதி, முதல் குற்றவாளி ரூ.27,000/– அபராதமும், மீதமுள்ள மூன்று குற்றவாளிகளும் தலா ரூ.25,000/ அபராதமும் செலுத்தவேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

இவ்வாறான அரச அதிகாரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்குமாறு வழக்குத் தொடரில் ஆஜரான பிரதிச் சட்டமா அதிபர் ஜனக பண்டாரவின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிபதி, அரசு அதிகாரிகள் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை குலைக்கும் வகையில் செயல்பட்டவர்கள் இந்த அதிகாரிகள் என்று நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார், தங்கள் அசாத்திய பேராசைக்காக இவர்கள் பணம் குவித்துள்ளார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை சுங்க உதவி சுங்க அத்தியட்சகர் உபாலி குணரத்னபெரேரா, சுங்கஅத்தியட்சகர்வசந்தவிமலவீர, சுங்க அத்தியட்சகர் உபாலி செனரத் விக்கிரமசிங்க மற்றும் சுங்க அத்தியட்சகர் சுஜீவ பராக்கிரம ஜினதாச ஆகியோரே குற்றவாளிகள் என்று நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வரலாற்றில் இதுவொரு மிக முக்கியமான தீர்ப்பு. குற்றவாளிகள் மேன்முறையீடு செய்து தண்டனைக் காலத்தைக் குறைக்கக்கூடும். எனினும் பொதுச் சட்டங்களை மீறி இலஞ்சம் பெற்று ஊழல் புரியும் அதிகாரிகளுக்கான ஒரு படிப்பினையாக நீதிபதி அதிகூடிய தண்டனையை இந்த நால்வருக்கும் விதித்திருப்பது பாராட்டுக்குரியது. குற்றத்தின் பாரதூரத் தன்மையைப் புரிந்துகொள்வதற்கு இந்தக் கடுமையான தண்டனை பெரிதும் உதவும்.

இலஞ்சமும்ஊழலும்மலிந்துபோய்விட்ட இலங்கையில், அதுவும்அரசதுறையில்வந்திருக்கக்கூடிய இந்தத்தீர்ப்பு மிகமுக்கியமானது. இலஞ்சம்பெற்று ஊழல்மோசடியில் ஈடுபடும் அதிகாரிகளுக்கு ஓர் எச்சரிக்கையாகவும் இருக்கிறது. இலங்கை இன்று பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிக்கொண்டதற்கு இத்தகைய இலஞ்ச ஊழல் அதிகாரிகளும் ஒரு காரணம் என்பதை மறுக்க முடியாது. அதனாலேயே இலஞ்சம் ஊழல் ஒழிக்கப்படுவதற்கான கடுமையான சட்டங்கள் இயற்றப்படவேண்டும் என்பதை பன்னாட்டு நாணய நிதியம் ஒரு நிபந்தனையாகவே முன்வைத்தது.

இலங்கை சீரழிந்ததற்கு அரசியல்வாதிகள் எந்தளவிற்குப் பொறுப்போ அதுபோன்றே அரச அதிகாரிகளின் இலஞ்சஊழலும்பொறுப்பு. இந்தநிலமை மாற்றப்படவில்லையாயின் பொருளாதார அரசியல் மீட்சி சாத்தியமற்றதாகிவிடும். அந்த வகையில் இப்போது வந்திருக்கக்கூடிய தீர்ப்பு நம்பிக்கையளிக்கக்கூடியது. இனிவரும் காலங்களில் இலஞ்சம் பெற அதிகாரிகள் அச்சப்படும்நிலையைஅது உருவாக்கும்என்றுநம்பலாம். அதிகாரிகளை மட்டுமன்றி இலஞுசம் பெற்ற, பொதுச் சொத்துக்களைச் சூறையாடிய அரசியல்வாதிகளையும் இவ்வாறு ஈவு இரக்கமின்றித் தண்டிக்கப்பட்டால்தான் இலங்கை உருப்படும்.



# யாரிந்த சுமந்திரன்? ஏனிந்த அவலம்?


**ந.சதாசிவ ஐயர்**

இப்போது வடக்கில் கிழக்கில் அகில இலங்கையில் இனமதமொழிபேதமின்றி ஏன் சர்வதேசத்திலும்கூட உச்சிரிக்கப்படும் ஒரே நாமம் சுமந்திரன் சுமந்திரன் சுமந்திரன். ஊடகங்களை பார்த்தால் அனுரவைவிட சுமந்திரனே எங்கும் எதிலும்.

சுமாவை திட்டி ஏதாவது எழுதாவிட்டால் தூக்கம் வராத ஊடகங்கள் ஒருபக்கம். ஏங்கே சுமந்திரனும் தமிழ் அரசும் தலையெடுத்துவிட்டால் எங்கள் அரசியல் வாழ்வு அஸ்த்தமனமாகிவிடுமோ எனும் பயமோ தெரியவில்லை இப்போ நம்மிடையே தாங்களும் அரசியல்வாதிகள் என்று சொல்லிக்கொள்கின்றமுன்னாள்இயக்கங்கள்என்று சொல்லிக்கொண்டவர்களும் ஏனோ தெரியவில்லை தென்னிலங்கை அரசியல் வாதிகளும்கூட சுமந்திரன் வெளிநாட்டமைச்சராகப்போகிறார் நிதியமைச்சராகப்போகிறார் என பரப்புரை செய்யத் தொடங்கிவிட்டார்கள்.

தமிழர் பகுதிகளில் போட்டியிடுகின்ற ஏனைய கட்சிகள், குழுக்கள் பற்றியோ ஓரிரு ஆசனங்களைச் சுருட்ட முயற்சிக்கின்ற தென்னிலங்கை கட்சிகள் பற்றியோ யாருக்கும் அக்கறையில்லை. ஏல்லோருக்கும் ஒரே நோக்கம் சுமந்திரனை ஓரங்கட்டிவிடுவதுதான். அப்படிச் செய்துவிட்டால் தாங்கள் விரும்பியபடி குதிரை ஓடலாம் என்பதாலா அல்லது சுமந்திரனுக்கு தெற்கில் இருக்கின்ற மதிப்பின் மிரட்சியா? இதில் ஏதோ ஒரு காரணத்தால் சுமந்திரனைச் சுற்றியே அவர்களின் அரசியல் பயணிக்கிறது.

யாழ்ப்பாணத்துக்குள் மட்டும் குண்டுச்சட்டிக்குள் குதிரை ஓட நினைப்பவர்கள் நிதமும் சுமந்திரனைப் பற்றிஏதாவதுசொல்வதில்சுயஇன்பம்காண்பவர்களாக இருக்கிறார்கள். பாவம் இளைஞர்களுக்கும் புரியவில்லை வெறும்வாய் மெல்லுபவர்களுக்கும் புரியவில்லை.



சுமந்திரன் அப்படி என்னதான் செய்துவிட்டார்? தமிழ் அரசுக் கட்சியை உடைத்துவிட்டார்.. எல்லாரையும் பிரித்துவிட்டார். ஒரு தனிமனிதனால் இது சாத்தியமாகுமா? அப்படி அவர் செய்திருந்தால் அவரின்வல்லமைஏற்கப்படவேண்டியஒன்றுதானே? அவரை விட்டுப்போனவர்களால் ஏன் ஒன்று சேர்ந்து அவரை எதிர்க்க முடியவில்லை வெளியேற்ற முடியவில்லை? அந்த வல்லமையில்லாதவர்கள் இருந்தென்ன போயென்ன? சரி போனதுதான் போனார்கள் மறு நாள் விடிவதற்குள் மறு மணம் செய்து கொண்டார்களே!

தமிழ் அரசுக் கட்சி வரலாற்றில் நடக்காதவை எதுவுமே புதிதாக நடைபெறவில்லையே? காங்கிரசும் தமிழ் அரசும் பிரிந்தன, ஏழு தசாப்பதங்களாக கௌரவத்துடன் போட்டிபோட்டன, உறக்க நிலையில் இருந்தன, சேர்ந்தன பிரிந்தன.

தமிழசின் வரலாற்றில் அரசுடன் சேர்ந்து அமைச்சுப் பதவி பெற்றதும் விலகியதும் ஏற்கனவே நடந்தவைதானே. ஆளும்தரப்புடன் சம்பந்தர் சுமந்திரன் தொடர்பை விமர்சிக்கிறோம். இதேநிலை செல்வநாயகம் அமிர்தலிங்கம் காலத்தில் நிகழவில்லையா? ஐயா வாயசைக்க அமிர் முழங்கிய கூட்டங்கள் பலரறியாத விடயமா? ஐயாவின்பின் அமிர் குரல் தனித்து எழுந்ததும் அறியோமோ? அவர் பின்னால் தமிழ் அரசு திரண்டதும் அறியோமோ?

தமிழ் அரசுக் கட்சியில் யாப்பின்படி பொதுக்குழு தெரிவுக்குழு என்பன எல்லாம் செயற்படுகின்றனதானே? தலைவர் மாவை அண்ணை இருக்கிறார்தானே? என்னுடைய வாதம் என்னவெனில், அவர் ஏன் பேசாமடந்தையாய் இருந்தார்? சுமந்திரன் அதிருப்தியாளர்களால் ஏன் அவரைச் சூழநின்று கேடயமாக காத்து அவர் மூலம் ஏன் சாதிக்க முடியவில்லை? தவறெனின் செயலாளரிடம் சுட்டிக்காட்டி சட்டப்படி ஆவன செய்யாமல் ஏன் பயந்தோடினார்கள்? பொதுக்குழு தெரிவுக்குழு என்பவற்றின் முடிவுகள் தவறாக இருந்தால் முறைப்படி ஏன் திருத்தமுடியவில்லை? காரணம் சுமந்திரனின் ஆழுமை, நேர்மை. அவரின் வாதத்தை அரசியல் குழு மத்திய குழுவில் அதிகளவில் ஏற்பதால்தானே அவரது எதிராளிகளால் அவர்கள் நினைத்ததைச் செய்ய முடியவில்லை?

சுமந்திரன் யார்? சம்பந்தனால் வளர்க்கப்பட்டவர். அவரின் குரலாய் பேச்சாளராய் அவருக்காக செயற்பட்டவர். ஒரு வருடங்களா இரு வருடங்களா இல்லை பல வருடங்கள். அப்பபோதெல்லாம் எங்கே போனார்கள் இந்த அதிருப்தியாளர்கள்? அவர் எல்லோராலும் மதிக்கப்படுகின்ற ஒரு சிறந்த சட்டவாதி. நாடாளுமன்றிலும் நீதிமன்றங்களிலும் முழங்கியதிறமைமும்மொழிகளிலும்இலங்கையிலும் சர்வதேசத்திலும் ஊடகங்களில் துணிந்து முழங்கும், பேட்டி கொடுக்கும் ஒரே தமிழ் அரசியல்வாதி. வடக்கையும்கிழக்கையும்முக்கியமாக அம்பாறையையும் நேசித்த ஒருவர். சுமந்திரனிடம் நேர்மை இருக்கிறது, யதார்த்தமிருக்கிறது, பயமின்மை இருக்கிறது, தெளிவு இருக்கிறது, உண்மை உரைத்தல் இருக்கிறது. வாதத் திறமை இருக்கிறது. தெற்கிலும் ஏன் சர்வதேசத்திலும் ஒரு மரியாதை இருக்கிறது. அவர்கள் நட்புடனும் கௌரவத்துடனும் சுமந்திரனுடன் தொடர்பு பேணுகின்றனர். சுமந்திரனும் அவ்வாறே.

நிச்சயமாக 1985.. 2010 வரையான காலத்தின் உண்மைஅறிந்தவர்கள்அனுபவித்தவர்கள்அதனை வெளியில்சொல்வதில்லை. அக்காலத்தில்வன்னியிலும்

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

காலைக்கதிர் Kalaikkathir

# யாரிந்த சுமந்திரன்?

4ம் பக்க தொடர்ச்சி..........



வடக்குக் கிழக்கிலும் அவர்களுக்கும் இப்போ தூய அரசியல்வாதிகளாக நடிக்கும் ஒட்டுக்குழுக்களுக்கும் முகம்கொடுத்து மக்கள் சேவை செய்தவர்கள் பலர் இன்னும் உண்மை பகராது நமக்கென்ன என பேசா மடந்தைகளாய் இருக்கின்றனர். அவர்கள் வாய் திறந்திருந்தால் யதார்த்தம் பேசியிருந்தால் இன்று நிலைமை வேறு. அவர்களில் நானும் ஒருவன்.

சுருக்கமாக சொல்வதானால் மற்றவர்களைப்போல தமிழ் அரசுக் கட்சியில் தொங்கிக்கொண்டுதான் புகழ்பெறவேண்டுமென்ற தேவை சுமந்திரனுக்கில்லை . ஆனாலும் தான் சார்ந்துவிட்ட கட்சியை களையெடுத்து நல்லறுவடைசெய்ய முயற்சிக்கின்றார். அவ்வளவுதான்.. கடந்த தேர்தலில் அம்பாறை அங்கத்துவம் இழந்தபோது தேசியப்பட்டியலை அம்மாவட்டத்துக்கு வழங்க யாரும் முன்வரவில்லையே? பலரின் வெறுப்புக்கு முகம் கொடுத்து அதை வழங்கி அந்த மாவட்ட மக்களுக்கும் தமிழ் அரசுப் பிரதிநிதித்துவத்தை பகிர உழைத்ததே நல்லதோர் உதாரணமல்லவா. இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம். ஆதலால் அவருக்கு ஆதரவுவழங்குவதுஒவ்வோர்தமிழரதும்கடமையாகும். சிந்தித்தால் நமக்கு நன்மை. சிந்திப்போமா?

# பிரித்தானிய உயர்ஆணையர் பாதுகாப்பு செயலருடன் சந்திப்பு



இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பட்ரிக் பாதுகாப்பு செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் தூயகொந்தாவை (ஓய்வு) செவ்வாய்க்கிழமை ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டையிலுள்ள பாதுகாப்பு தலைமையக வளாகத்தில் மரியாதை நிமிர்த்தம் சந்தித்தார்.

இச்சந்திப்பின் போது, இருதரப்பு முக்கியத்துவம் மற்றும் பரஸ்பரம் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பாக பாதுகாப்பு செயலாளருக்கும் பிரித்தானிய உயர்ஸ்தானிகருக்கும் இடையில் சுமுகமான கலந்துரையாடல் இடம்பெற்றன.

பாதுகாப்பு அமைச்சின் இராணுவ இணைப்பு அதிகாரி எயார் வைஸ் மார்ஷல் பத்மன் டி கொஸ்தா மற்றும் கொழும்பில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.(05)

# பெண் அரசியல் தலைமைக்கான முதலாவது படி நாடாளுமன்றமே

### சமூக நீதிக்கட்சி வேட்பாளர் சோபிதா கூறுகிறார்



பெண் அரசியல் தலைமைகளுக்கான முதலாவது படியாக நாடாளுமன்றம் உள்ளது என கண்டி மாவட்டத்தில் சமூக நீதிக்கட்சி சார்பாகப் போட்டியிடும் பெண் வேட்பாளரான பட்டயக் கணக்காளர் செல்வி சிவாகரன் சோபிதா தெரிவித்தார்.

கண்டி இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

சமையலறை இல்லாவிட்டால் அது பூரணமான வீடாகாது, வீட்டு நிர்வாகத்தில் சமையலறை எவ்வளவு பிரதானமோ அதைப் போல் நாட்டு நிர்வாகத்தில் நாடாளுமன்றம் முக்கியமானதாகும். இலங்கை அரசியல்வரலாற்றில்பெண்தலைமைகள்பலவற்றைக் கண்டுள்ளோம்.

அந்த வரிசையில் ஸ்ரீமாவோ அம்மையார் பிரதமராகவும், சந்திரிகா அம்மையார் பிரதமர் மற்றும் ஜனாதிபதி ஆகிய பதவிகளை அலங்கரித்தார். அண்மையில்ஹரிணிஅமரசூரியஅம்மையார்பிரதமராக தெரிவு செய்யப்பட்டார். அந்த வரிசையில் இன்னும் பலர் எதிர் காலத்தில் உருவாகலாம். அதற்கு பெண் தலைமைகள் உருவாக்கப்பட வேண்டும்.

அப்படியான அரசியல் பெண் தலைமைகளுக்கான முதலாவது படியாக நாடாளுமன்றம் உள்ளது எனக் கருதுகிறேன். எனவே பெண்களை இத்துறையில் ஊக்குவிக்க வேண்டும். அந்த அடிப்படையில் என்னாலான ஒரு பங்களிப்பாக அரசியல் பிரவேசத்தின்ஓர்ஆரம்பகட்டத்தில் நான் பிரவேசித்துள்ளேன்.

இனிஎன்னைவளர்த்தெடுப்பது வாக்காளர்களான உங்கள் கையில் உள்ளது. சமையலறை இல்லாத கட்டடம் வீடாகாது. அதற்கு வேறு பெயர்களை வைக்க வேண்டும். சமையலறை ஒழுங்காக இருந்தால் சுவையான உணவு, தேகாரோக்கியமான உணவு, சத்துணவு, போன்ற பல அம்சங்கள் இருக்கும். அதே போல் சமையலறையில் குறை ஏற்படின் வீட்டில் நிம்மதி இருக்காது.

கண்ட கண்ட உணவுகளை கண்டபடி எடுத்து வீட்டில் நோயாளர் எண்ணிக்கை அதிகரிக்கும். வீண் செலவுகள் ஏற்படும். அதே போல் சமயலறைக்கு பொறுப்பான பெண் அதிகாலை முதல் எழுந்து இறுதியாக தூங்குவாள். நித்திரை செய்யும் நேரம் தவிர கூடுதல் நேரம் வீட்டு நிர்வாகத்தில் செலவாகிவிடும். அதேபோல் பாராளுமன்றம் ஒழுங்காக அமைந்தால் நாட்டின் அனைத்து செயற்பாடுகளும் சிறப்பாக இருக்கும். பெண்கள் கூடுதலான நேரம் சேவை புரிபவர்.

எனவேசிறந்தவர்களைதெரிவுசெய்யுங்கள். அதிலும் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய மாற்றங்களுக்கு ஏற்ப பொருத்தமானபெண்தலைமைகளைஉருவாக்குங்கள். கற்றவர்களை பாரளுமன்றம் அனுப்புங்கள் என்றார். சமூக நீதிக் கட்சியின் கொள்கை விளக்கயேடும் அங்கு கையளிக்கப்பட்டது.(05)

# 2 வர்த்தக நிலையங்கள் தீப்பற்றி எரிந்து நாசம்



கொழும்பு, ஜாவத்தை சந்தியில் உள்ள இரண்டு வர்த்தக நிலையங்களில் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக கறுவாத்தோட்டம் பொலிஸார் தெரிவித்தனர்.

தீ விபத்தின் போது எவருக்கும் எந்தவிதகாயங்களும்ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத்தீவிபத்திற்கானகாரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு மாநகர சபையின் தீயணைப்புபடையினர்இணைந்து தீபரவலைக் கட்டுப்படுத்தியுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைகறுவாத்தோட்டம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

### கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை

# புற்றுநோய் பிரிவு கட்டடம் அமைக்க உடன்படிக்கை




காலி, கராப்பிட்டி போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் பிரிவுக்கான பத்து மாடி கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் செவ்வாய்கிழமை கோட்டை ஸ்ரீஜயவர்தனபுரவில் அமைந்துள்ளபாதுகாப்புஅமைச்சில் கைச்சாத்திடப்பட்டது.

வைத்தியசாலையின்புற்றுநோய் பிரிவுக்கான பத்து மாடி கட்டடம் நிர்மாணிப்பதற்கு சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் கலர்ஸ் ஒப் கரேஜ் நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையே இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. நிர்மாண வேலைகளுக்கான ஆள்பலம் இலங்கை இராணுவத்தினால் இலவசமாக வழங்கப்படவுள்ளது.

பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் தூயகொந்தா (ஓய்வு), சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் பி.ஜி.மஹிபால, மஹேலஜயவர்தன மற்றும்டயான்கோமஸ்ஆகியோரின் பங்குபற்றலுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஆவணங்கள் கையெழுத்திடப்பட்டன.

பாதுகாப்புஅமைச்சின்இராணுவ இணைப்பு அதிகாரி எயார் வைஸ் மார்ஷல் பத்மன் டி கொஸ்தா, சட்ட ஆலோசகர்எயார்கொமடோர்சுரேகா டயஸ் உட்பட அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள், சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள், மற்றும் அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

(05)

# இரண்டு சிறுவர்கள் மீது பாலியல் துஷ்பிரயோகம்

## முதியவர் கைது

இரு சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகக் கூறப்படும் முதியவர் ஒருவர் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என மஹரகம பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்மஹரகம - எருவ்வல பிரதேசத்தில் வசிக்கும் 75 வயதுடைய முதியவர் ஆவார்.

10 மற்றும் 12 வயதுடைய இரு சிறுவர்களே பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளான இரு சிறுவர்களும் மஹரகம - எருவ்வல பிரதேசத்தில் விளையாடிக்கொண்டிருந்த போது அப்பிரதேசத்திற்குஓட்டோவில்சென்ற சந்தேக நபர், இரு சிறுவர்களையும் ஏமாற்றிஹொரணைபிரதேசத்திற்கு அழைத்துச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

பின்னர், சந்தேக நபர் இந்த இரு சிறுவர்களையும் மக்குலுதுவ பிரதேசத்தில்விட்டுவிட்டுஅங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இதனையடுத்து பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளான சிறுவர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் இது தொடர்பில் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளனர்.

பின்னர், பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹரகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# தம்புள்ளை பகுதியில் விலை உயர்ந்த மாணிக்கக் கற்களுடன் நால்வர் கைது

மாத்தளை, தம்புள்ளை நகரத்தில் விலையுயர்ந்த 08 மாணிக்கக் கற்களுடன் நான்கு சந்தேக நபர்கள் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என தம்புள்ளை பொலிஸார் தெரிவித்தனர்.

தம்புள்ளை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், சந்தேகத்திற்கிடமான முறையில் பயணித்த கார் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மனம்பிட்டிய, பொலன்னறுவை, கண்டி மற்றும் ஹதரலியத்த ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் 43, 47, 52 மற்றும் 59 வயதுடையவர்கள் ஆவர்.

சந்தேகநபர்கள் நால்வரும் இந்த மாணிக்கக் கற்களை மற்றுமொரு நபருக்கு விற்பனை செய்வதற்குத் தயாராக இருந்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்புள்ளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடையவர் கைது

பல்வேறு திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபரொருவர் கம்பஹா, களுவாரிப்புவ பிரதேசத்தில் வைத்து செவ்வாய்க்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளார் என நீர்கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் தெரிவித்தனர்.

நீர்கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் நீர்கொழும்பு, கொச்சிக்கடை பிரதேசத்தில் வசிக்கும் 27 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபர் கந்தானை, நீர்கொழும்பு மற்றும் வென்னப்புவ ஆகிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் பல்வேறு திருட்டு சம்பவங்களில் ஈடுபட்டுள்ளார் என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து கையடக்கத் தொலைபேசி, தொலைக்காட்சிப் பெட்டி , 2 தங்க மோதிரங்கள் , வெளிநாட்டு மதுபான போத்தல்கள் மற்றும் எரிவாயு சிலிண்டர் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நீர்கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# சீன அரசின் வீட்டுத் திட்டத்துக்கு அமைச்சரவை வழங்கியது அனுமதி

குறைந்த வருமானம் கொண்ட நபர்களுக்கு சீன அரசின் நிதியுதவி வேலைத்திட்டத்தின் கீழ் 1996 வீட்டு அலகுகளை நிர்மாணித்தல், 03 தொகுதியின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்காக சீன அரசால் பெயர் குறித்துரைக்கப்பட்டுள்ள விலைமனுதாரர்கள் 08 பேரிடம் விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன.

குறித்த விலைமனுக்களை மதிப்பீடு செய்த பின்னர், தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர பெறுகைக் குழுவின் விதந்துரைகளுக்கமைய கீழ்வருமாறு ஒப்பந்தங்களை வழங்குவதற்காக கிராமிய, நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் கட்டுமானங்கள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தொகுதி 1 மொரட்டுவை 575 வீட்டு அலகுகள் மற்றும் கொட்டாவ 108 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம், தொகுதி 2 தெமட்டகொட 586 வீட்டு அலகுகள் மற்றும் மஹரகம 112 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம், தொகுதி 3 பேலியகொடை 615 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் என்பதை சீன நிறுவனங்களுக்கு வழங்கப்படவுள்ளன. (05)

# பொலன்னறுவை வர்த்தகரின் இறப்புக் குறித்துச் சந்தேகம்

பொலன்னறுவை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் வர்த்தகர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலன்னறுவை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

பொலன்னறுவை, கத்துருவெல பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதுடைய வர்த்தகர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

இவர் தனது வர்த்தக நிலையத்திலிருந்து வீடு நோக்கி காரில் சென்று கொண்டிருக்கும் போது இவ்வாறு உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் மார்பு பகுதியில் காயங்கள் காணப்படுவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது கொலையாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலன்னறுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# மின்சாரம் தாக்கியதில் களுகெலேவாசி சாவு

பொலன்னறுவை, சிறிபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட களுகெலே பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார் என சிறிபுர பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

பொலன்னறுவை, களுகெலே பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய நபரொருவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் தனது வீட்டிற்கு அருகில் அலங்கார மீன் விற்பனை நிலையம் ஒன்றை நடத்தி வந்துள்ள நிலையில் மீன் தொட்டிகளைக் காட்டு யானைகளிடம் இருந்து பாதுகாப்பதற்காகச் சட்டவிரோதமாகப் பொருத்தப்பட்டிருந்த மின் கம்பிகளில் சிக்கி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சிறிபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# காலி முகத்திடலில் சமூக நிகழ்வுகளுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் தளர்வு

காலி முகத்திடலை மத வழிபாட்டு நடவடிக்கைகளுக்காக மாத்திரமின்றி ஏனைய நடவடிக்கைகளுக்கும் நிபந்தனைகளுடன் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி காலி முகத்திடலை சமய நடவடிக்கைகள் அல்லாத ஏனைய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த அனுமதி இல்லை என்ற தீர்மானத்தை அமைச்சரவை நிறைவேற்றியது.

இந்நிலையில், தற்போதைய அரசாங்கம் காலி முகத்திடலில் சமூக நிகழ்வுகளுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை தளர்த்தியுள்ளது.

காலி முகத்திடலை நிர்வகிப்பதற்கும் பராமரிப்பதற்கும் மாதாந்தம் 2.5 மில்லியன் முதல் 3 மில்லியன் ரூபா வரை செலவு செய்யப்படுவதாக விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (05)

# ஒன்றரைக் கோடி ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன் மூவர் கைதாகினர்

ஒன்றரை கோடி ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன் இரண்டு பெண்கள் உட்பட மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கம்பஹா, தெல்கொட பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

38 மற்றும் 58 வயதுடைய இரு பெண்களும் 26 வயதுடைய இளைஞனுமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து ஒரு கிலோ 15 கிராம் ஐஸ் போதைப்பொருள், 4 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் கார் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரும் மேலதிக விசாரணைகளுக்காக மீகஹவத்தை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (05)

# 2 கைதிகள் இடையில் தகராறு கத்திக் குத்தில் ஒருவர் காயம்

அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரு கைதிகளுக்கு இடையில் ஏற்பட்ட தகராறில் கத்திக் குத்துக்கு இலக்காகி ஒருவர் காயமடைந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது - சம்பவத்தன்று சந்தேக நபரான கைதியும் காயமடைந்த கைதியும் சிறைச்சாலையைச் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்துள்ள நிலையில் இருவருக்கும் இடையில் தகராறு ஏற்பட்டுள்ளது.

இதன்போது, சந்தேக நபரான கைதி காயமடைந்த கைதியைக் கத்தியால் குத்தி காயப்படுத்தியுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, காயமடைந்தவர் தங்காலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05)

# ஜனாதிபதியின் உருவம் பொறித்த போலி நாணயத்தாள்கள் விற்பனை

## சந்தேகநபருக்கு விளக்கமறியல்

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் உருவம் பொறிக்கப்பட்ட போலி நாணயத்தாள்களை தயாரித்து சமூக ஊடகங்கள் ஊடாக விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கெஸ்பேவ நீதிவான் நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளது.

அத்துருகிரிய, கொரதொட்ட பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய நபரொருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது - ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் உருவம் பொறிக்கப்பட்ட ஐயாயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள் சமூக ஊடகங்கள் ஊடாக விற்பனை செய்யப்படுவதாகக் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து, மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கடந்த 4 ஆம் திகதி அன்று குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பின்னர் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (05)

# கால்வாயில் அடித்துசெல்லப்பட்ட கெப் வாகனம்; இருவர் உயிரிழப்பு

கொஸ்கம பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட எஸ்வத்த - மானகட வீதியில் தும்மோதர கால்வாயை கடக்க முற்பட்ட கெப் வாகனம் ஒன்று நீரில் அடித்துச்செல்லப்பட்டதில் இருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது கெப் வாகனம் சுமார் 50 மீற்றர் தூரம் வரை வெள்ளத்தில் இழுத்துச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது கெப் வாகனத்தில் சாரதி உட்பட நான்கு பேர் பயணித்துள்ளதுடன், அவர்களில் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் பலல்கொட்டுவ மற்றும் கிரிபத்கொடை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 27 மற்றும் 69 வயதுடையவர்களாவர்.

மேலும், உயிரிழந்தவர்களின் சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக அவிசாவளை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொஸ்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# மார்ச், ஏப்ரல் மாதங்களில் நாடு மீண்டும் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ளும்

## ராஜித சேனாரத்ன ஆரூடம்

பணம்அச்சிடப்படுவதால் மீண்டும் பண வீக்கம் அதிகரித்து பொருள்களின் விலைகளும் அதிகரிக்கவுள்ளன. மார்ச், ஏப்ரல் மாதங்களில் நாடு மீண்டும் நெருக்கடிகளை எதிர்கொள்ளும்.

வரிசை யுகம் உருவாகும். இதனை முன்னரே அறிந்ததால் தான் ஒன்றரை ஆண்டுகளில் முடியாவிட்டால் விட்டுச்செல்வதாக அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

களுத்துறையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

வங்குரோத்தடைந்த நாடொன்று மிகக் குறுகிய காலத்தில் அந்த நிலைமையிலிருந்து மீண்டிருக்கின்றது என்றால் அது இலங்கை மாத்திரமே.

அதற்குரிய பெருமை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது அரசாங்கத்தையே சேரும். எவ்வாறிருப்பினும் அதனை மக்கள் மறந்து விட்டனர்.

தற்போது யார் வேண்டுமானாலும் நாட்டை நிர்வகித்துச் செல்லலாம் என்று மக்கள் எண்ணுகின்றனர். ஆனால் அது தவறாகும். இதனை நாம் தேர்தலுக்கு முன்னரே கூறினோம்.

எனினும் 42 சதவீத மக்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் தற்போது ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத் திட்டத்தை அந்த மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி ஏற்றுக் கொண்டிருக்கின்றார்.



செப்ரெம்பர் 19ஆம் திகதி சர்வதேச நாணய நிதியத்துடன் கையெழுத்திடப்பட்ட இணக்கப்பாட்டு ஒப்பந்தம் அவ்வாறே கையெழுத்திடப்படுகிறது.

தற்போது நாடு பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. 14ஆம் திகதியாகும் போது மக்கள் படிப்படியாக இதை உணர்ந்து கொள்வார்கள்.

நாணய நிதியம் குறிப்பிட்டுள்ள இலக்கை நோக்கி செல்ல வேண்டும். ஆனால் அந்த இலக்கை எவ்வாறு அடைவது என்பது குறித்த அறிவு இந்த அரசாங்கத்துக்கு இல்லை.

எனவே தான் 98 000 கோடி கடன் பெற்றுள்ளனர். ஒருபோதும் பிணைமுறி கடன் பெறப் போவதில்லை எனக் கூறியவர்கள் தான் இந்தளவு கடனைப் பெற்றிருக்கின்றனர்.

கடன் பெற்று நாட்டை நிர்வகிப்பதென்றால் அரசாங்கம் எதற்கு எனக் கேட்டனர். தற்போது அதையும் இவர்கள் செய்கின்றனர்.

பணம் அச்சிடப்படுவதால் மீண்டும் பண வீக்கம் அதிகரித்து பொருள்களின் விலைகளும் அதிகரிக்கவுள்ளன. மார்ச், ஏப்ரல் மாதங்களில் நாடு மீண்டும் நெருக்கடிகளை எதிர்கொள்ளும்.

வரிசை யுகம் உருவாகும். இதனை முன்கூட்டியே கணித்ததன் காரணமாகவே ஒன்றரை ஆண்டுகளுக்கு இதனை செய்வதாகவும், முடியாவிட்டால் விட்டுச் செல்வதாகவும் குறிப்பிட்டுள்ளார். அவர் அதைக் கூறினாலும் அவரது சகாக்கள் அதனை விரும்பவில்லை.

தொழிற்சங்கங்கள் கலைக்கப்படும் என்று நிபுனாராச்சி கூறுகின்றார். கடந்த ஆட்சி காலங்களில் தொழிற்சங்கங்களை வீதிக்கிறக்கி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட இவர்கள் தற்போது தமது தேவை நிறைவேறிய பின்னர் அவற்றைக் கலைப்பதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

மறுபுறம் ஜனாதிபதி மற்றும் ஹரிணி அமரசூரிய ஊடகங்களுக்கு அச்சுறுத்தல் விடுத்துக் கொண்டிருக்கின்றனர். நாட்டை நிர்வகிக்க முடியாவிட்டால் கோட்டாபய ராஜபக்ஷவைப் போன்று பயந்து ஓடாமல் பலவந்தமாக அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வோம் என்பதே இவர்களது கொள்கையாகவுள்ளது.

தற்போது கிடைத்துள்ள அனைத்தையும் இழக்கும் போது தான் மக்களுக்கு எமது ஆட்சியில் கிடைத்தவற்றின் பெறுமதி புரியும். - என்றார்.(05)




# உடுவில் கலாசார மத்திய நிலையத்தில் புதிய வகுப்புக்கள் ஆரம்பமாக உள்ளன

உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் அமைந்திருக்கும் கலாசார மத்திய நிலையத்தில் கர்நாடக சங்கீதம், பரதநாட்டியம், மிருதங்கம், வயலின், நாடகமும் அரங்கிலும், சித்திரமும் வடிவமைப்பும், சிங்களம் ஆகிய பாடநெறிகள் கற்பிக்கப்படவுள்ளன.

புத்தசாசன சமய மற்றும் கலாசார அமைச்சின் கீழ் இயங்கும் உடுவில் கலாசார மத்திய நிலையத்தில் 2025 ஆம் ஆண்டிற்கான திறமை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இக் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்காக உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் குறித்த பாடங்களைக் கற்பிக்கக் கூடிய தகுதி வாய்ந்த ஆசிரியர் களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கற்பிக்க ஆர்வமுள்ளவர்கள் தங்களது சுய விவரங்களை 2024 .11.15 ஆம் திகதிக்கு முன்னர் நிலையப்பொறுப்பதிகாரி, கலாசார மத்திய நிலையம். உடுவில், கற்பொக்கனை பிள்ளையார் கோவிலடி என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு நிலையப்பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.(05)

# தெற்கில் ஏற்பட்ட மாற்றம் தமிழ் மக்களுக்கானதல்ல

## குருசாமி சுரேந்திரன் தெரிவிப்பு




தென்னிலங்கையின் நிகழ்ச்சி நிரலில் பயணிப்பவர்களை அடையாளம் கண்டு தமிழ் மக்கள் புறக்கணிக்க வேண்டும் என ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் வேட்பாளர் குருசாமி சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ் . ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் -

கடந்த ஜனாதிபதி தேர்தலில் தென்னிலங்கை கட்சிக்கு வாக்களியுங்கள் என கோரியவர்கள். ஒரு மாதத்தில் அந்த சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டாம் எமது சின்னத்திற்கு வாக்களியுங்கள் என பிதற்றி வருகின்றனர்.

சுயேச்சைகள் மாத்திரமல்ல, கட்சிகள் கூட தென்னிலங்கை அரசியல் கட்சியின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவும், சலுகைகளுக்காகவும், பதவிகளுக்காகவும் நிற்பவர்களை மக்கள் சரியாக இனம் கண்டு அவர்களை புறக்கணிக்க வேண்டும்.


தெற்கில் ஏற்பட்ட மாற்றம் எமக்கான மாற்றமல்ல. தமிழ் மக்கள் நலன் சார்ந்து செயற்படுவர்களை இனம் கண்டு வாக்களிக்க வேண்டும்.

வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் தெற்கு மாற்றத்தினை பார்த்து மயங்காது. தமிழ் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த வேண்டும் என தெரிவித்தார். (05)





# வவுனியா பழைய பஸ் நிலையத்தில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது





வவுனியா பழைய பஸ் நிலையத்தில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளார் என வவுனியாபொலிஸார்தெரிவித்தனர்.

தலவாக்கலை பகுதியை சேர்ந்த கிருஷ்ணமூர்த்திஎன்பவரேசடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதேவேளை தடவியல் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட நிலையில் குறித்த பகுதிக்கு வந்த பதில் நீதிவான் தி.திருவருள் சட்டத்தை பார்வையிட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

மேலும்இச்சம்பவம்தொடர்பான மேலதிகவிசாரணைகளைவவுனியா பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமைகுறிப்பிடத்தக்கது. (05)

# ஆபிரிக்கப் பன்றிக் காய்ச்சல் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டது

ஆபிரிக்க பன்றிக் காய்ச்சல் தொடர்பில் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளதுடன், புதிய வர்த்தமானி அறிவித்தலைவெளியிடநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, ஆரோக்கியமான விலங்குகளை கொண்டுசெல்வதற்கான போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமாலி கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் -

பன்றிக் காய்ச்சல் பரவல் தற்போது குறைவடைந்துள்ளதால் பழைய வர்த்தமானி அறிவித்தல் தளர்த்தப்பட்டுள்ளதுடன் புதிய வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனால், பன்றிகளை வேறு இடங்களுக்குகொண்டுசெல்வதற்கு விதிக்கப்பட்ட தடை தற்போது நீக்கப்பட்டுள்ளது. ஆனால் பன்றிக் காய்ச்சலால் பாதிக்கப்படாத ஆரோக்கியமானவிலங்குகளையே இவ்வாறு கொண்டுசெல்ல முடியும்.

இதேவேளை, மேல் மாகாணத்தில் மாத்திரம் 50 வீதமானபன்றிகள்ஆபிரிக்கபன்றிக் காய்ச்சலால்உயிரிழந்துள்ளனஎன மேல்மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், கம்பஹா மாவட்டத்தில் அதிகளவான பன்றிகள் உயிரிழந்துள்ளதாக இந்த திணைக்களத்தின் பணிப்பாளர் கே.கே.சரத் தெரிவித்துள்ளார்.

(05)




காலைக்கதிர் Kalaikkathir

# இ.தொ.காவின் சிரேஷ்ட பிரமுகர் பிலிப்குமார் கட்சியிலிருந்து விலகல்



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சிரேஷ்ட உறுப்பினர் ஏ.பிலிப்குமார் தான் கட்சியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

கடந்த 37 வருடங்களாக கட்சியின் உறுப்பினராக இருந்த பிலிப்குமார் மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினராகவும் செயற்பட்டவர்.

இளைஞர் அணி இணைப்பாளராக இணைந்து கொண்ட அவர் கட்சியின் உபசெயலாளராகவும் விலகும் போது உபதலைவராகவும் செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த முறை நாடாளுமன்றத் தேர்தலில் கட்சி சார்பாக போட்டியிட்ட இவர் 30 ஆயிரம் வாக்குகளை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(05)

# இலக்கத் தகடு பொருத்தாத வாகனத்துடன் இருவர் கைது

புத்தளம், வென்னப்புவ, மிரிஸ்ஸன்கொட்டுவ பிரதேசத்தில் அமைந்துள்ள வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இலக்கத் தகடு இல்லாத வாகனம் ஒன்றுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என வென்னப்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

வென்னப்புவபொலிஸாருக்குக்கிடைத்ததகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புத்தளம்லுணுவில மற்றும்மிரிஸ்ஸன்கொட்டுவ ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வென்னப்புவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# ஆலங்குளம் துயிலுமில்லத்தில் துப்புரவுப் பணிகள் மும்முரம்



திருகோணமலை மாவட்டம், மூதூர் கிழக்கு சம்பூர் ஆலங்குளம் துயிலுமில்லத்தில்செவ்வாய்க்கிழமை சிரமதானப்பணிகள் இடம் பெற்றன.

நிகழ்வில் உயிர்நீர்த்த மாவீரர் களை நினைவேந்தி சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

பொதுமக்கள் பலர் சிரமதானப் பணியில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழப்பு

காலி, பெந்தோட்டை, ரஜமாவத்தை பிரதேசத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளார் என பெந்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று (புதன்கிழமை) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

28 வயதுடைய இளைஞன் ஒருவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியை விட்டு விலகி அருகிலிருந்த தொலைபேசி கம்பத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது மோட்டார் சைக்கிளின் செலுத்துனர் படுகாயமடைந்துள்ள நிலையில் பெந்தோட்டை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பெந்தோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.11.2024இல் வெளியிடப்பெற்றது